# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## மாதிரிப் பரீட்சை — III

## 2014

தரம் – 11 வரலாறு

பகுதி- I

01. புராதன காலம் தொடக்கம் இன்றைய காலம் வரையில் "மனித குலத்தின் கடந்த காலத்தைக் கற்பது தான் வரலாறு." எனக் குறிப்பிட்ட அறிஞர்
    1. ஈ.எச்.கார் 2. ஸ்டுவட்பிகோட் 3. பேர்க்ஹாட் 4. ஜவகர்லால் நேரு

02. வர்த்தக சந்தையொன்றின் நிர்வாகம் பற்றிக் கூறும் கல்வெட்டு
    1. பதுளைத்தூண் கல்வெட்டு 2. சித்துல்பவ்வ
    3. கொடவாய தூண்கல்வெட்டு 4. மிகிந்தலைக் கல்வெட்டு

03. வரலாற்றுடன் தொடர்புடைய அறிஞர்களின் பெயர்கள் நிரல் I லும், அவர்களுடன் தொடர்புடைய நாடுகள் நிரல் II லும் தரப்பட்டுள்ளன. நிரல் I னை நிரல் II உடன் இணைக்கும் போது கிடைக்கு சரியான விடைத்தொகுதி

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. பிளினி | A. அரேபியா |
| 2. மெகஸ்தனீஸ் | B. உரோமம் |
| 3. சுலைமான் | C. சீனா |
| 4. பாகியன் | D. கிரேக்கம் |

1. BCDA 2. ACBD 3. BACD 4. BDAC

04. ஆரியர்கள் இந்தியாவில் அதிகளவான குடியேற்றங்களை அமைத்த நதிக்கரையோரம்.
    1. சிந்துநதி 2. யமுனை 3. கங்கைநதி 4. நர்மதாநதி

வரும் மன்னர்களை கால ஒழுங்கின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையாக அமைவது.
A. பிந்துசாரன்
B. பிம்பிசாரன்
C. அசோகன்
D. தனநந்தன்

1. BDAC 2. BACD 3. ACBD 4. DBCA

06. ப்த பேரரசில் நகர நிர்வாகத்திலும், திறைசேரி நிர்வாகத்திலும் ஈடுபட்ட அதிகாரிகள்.
    1. புரோகிதர்கள் 2. ஆயுக்தர் 3. இராஜமத்தியர் 4. கம்லத்த

07. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது.
    1. கி.பி 6ம் நூற்றாண்டுக்கு பிற்பட்டகாலம் 2. கி.பி 6ம் நூற்றாண்டுக்கு முற்பட்டகாலம்
    3. கி.மு 1ம் நூற்றாண்டுக்கு முற்பட்டகாலம் 4. கி.பி 2ம் நூற்றாண்டுக்கு பிற்பட்டகாலம்

08. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் உப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரம் கிடைத்துள்ள இடம்.
    1. பெலியன் குகை 2. பட்டதொம்பகுகை
    3. கித்துல்கலகுகை 4. பாகியன்கல குகை

09. 1ம் பராக்கிரமபாகு பற்றிய தகவல்கள் அடங்கிய கல்வெட்டு.
    1. தெவனகல கல்வெட்டு 2. பதுளை தூண் கல்வெட்டு
    3. அம்பகமுவ கல்வெட்டு 4. ரிட்டிகல குகைக் கல்வெட்டு

நிரல் I ல் குளங்களும் நிரல் II ல் மன்னர்களும் தரப்பட்டுள்ளன. நிரல் I னை நிரல் II உடன் இணைக்கும் போது பெறப்படும் சரியான விடைத்தொகுதி.

| | | | |
|---|---|---|---|
| 1. | பதவியாகுளம் | A. | பண்டுகாபயன் |
| 2. | கிரித்தல வாவி | B. | மகாசேனன் |
| 3. | குருளு வாவி | C. | II ம் முகலன் |
| 4. | ஜய வாவி | D. | IIம் அக்போ |

1. CBAD
2. DABC
3. ACDB
4. CDBA

நீரைக் குளமொன்றுக்கு கொண்டு வரும் போது வண்டலும் சேறும் குளத்தில் படிவதைத் தடுக்கும் குளத்தின் அமைப்பு.
1. வான்கதவு
2. உள்வான்கதவு
3. கலிங்கல் கட்டு
4. அலைதாங்கி

நீர்வள நாகரிக காலத்தில் ஸ்ரீ மேகவர்ண மன்னன் காலத்திற்குரிய "தோணிக்கல" கல்வெட்டில் குறிப்பிடப்படும் விடயம்.
1. நெற்செய்கை பற்றியது
2. கைத்தொழில் பற்றியது
3. வர்த்தகம் பற்றியது
4. கிராமத் தலைவனுக்குரிய கடமை பற்றியது.

பண்டு, பாரிந்த, குட்ட பாரிந்த, திரிதரன், தாடியன் போன்ற தென்னிந்திய ஆக்கிரமிப்பாளரிடம் இருந்து இலங்கையை மீட்டெடுத்த மன்னன்.
1. 1ம் அசேலன்
2. தாதுசேனன்
3. வலகம்பா
4. மகாசேனன்

கண்டி அஸ்கிரிய விகாரையை அமைத்த மன்னன்
1. 2ம் பராக்கிரமபாகு
2. 4ம் பராக்கிரமபாகு
3. 2ம் புவனேகபாகு
4. 4ம் புவனேகபாகு

தமிழ், சிங்கள மக்களிடையே நல்லுறவுடன் செயற்பட்ட யாழ்ப்பாண அரசன்.
1. சங்கிலியன்
2. விஜய கூழங்கை
3. வரோதயன்
4. குலசேகர ஆரியன்

மொகலாய சாம்ராஜ்ஜியத்தின் ஆரம்ப ஆட்சியாளன்.
1. அக்பர்
2. அவுரங்கசீப்
3. பாபர்
4. சாஜஹான்

டில்லி சுல்தான்" என தன்னை அறிமுகப்படுத்திய குதுபுதீன் ஐபெக்கின் அரச வம்சம்.
1. துக்ளக் அரசவம்சம்
2. செய்து அரசவம்சம்
3. அடிமை அரசவம்சம்
4. லோதி அரசவம்சம்

பின்வரும் நிகழ்ச்சிகளிடையே மகாசேனமன்னன் ஆட்சி செய்த காலத்தில் இந்நாட்டுக்கு வந்த வெளிநாட்டவர் ஒருவர் கேள்விப்பட்ட இரு நிகழ்ச்சிகளை தெரிந்தெடுக்க.

A. மாத்தளை அலுவிகாரையில் திரிபீடகத்தை நூலாக எழுதியமை.
B. சிகிரியாக் கட்டடத் தொகுதியை உருவாக்கியமை
C. கந்தளாயிலும் கிரித்தலையிலும் வாவிகளை அமைத்தல்.
D. ஸ்ரீ மகாபோதி கொண்டு வரப்பட்டமை.

1. A,D
2. A,C
3. B,C
4. C,D

பின்வரும் கூற்றுக்களில் மானிய சமூகத்துடன் தொடர்புடைய விடயங்கள் அடங்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

A. பிரபுக்கள் சிற்றரசர்கள் போல் செயற்பட்டனர்
B. தன்னிறைவுப் பொருளாதாரம் காணப்பட்டது.
C. திருச்சபையின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது.
D. சாதாரண மக்களுக்கு நிலஉரிமை காணப்பட்டது.

1. A,B
2. A,D
3. B,D
4. C,D

20. நிரல் I ல் உள்ளவற்றை நிரல் II உடன் பொருந்தும் போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதி.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. நிக்கலஸ் கொப்பனிக்கஸ் | A. செய்முறை விஞ்ஞானத்தின் தந்தை |
| 2. கலிலியோ கலிலி | B. கோள்கள் நீள்வட்டப்பாதையில் சுற்றுகின்றன. |
| 3. வில்லியம் ஹார்வே | C. மனிதனின் குருதிச்சுற்றோட்டம் |
| 4. ஜொஹன்ஸ் கெப்லர் | D. உலகம் கோள வடிவானது |

1. BCDA  2. DACB  3. ACBD  4. DCBA

21. ஐரோப்பாவில் முதன்முதலில் உருவாக்கப்பட்ட தேசிய அரசு
1. இங்கிலாந்து  2. பிரான்ஸ்  3. ஸ்பானியா  4. கிரேக்கம்

22. நாடுகாண் பயணத்தை மேற்கொண்டு ஆபிரிக்காவின் தென்முனை வரை சென்று "புயல்முனை" எனப்பெயர் சூட்டித் திரும்பிய கப்பலோட்டி.
1. கொலம்பஸ்  2. வாஸ்கொடகாமா
3. பத்தலோமியஸ் டயஸ்  4. அமெரிகோ வெஷ்புஷி

23. கீழைத்தேய வர்த்தகத்தை முஸ்லீம்களிடமிருந்து ஐரோப்பியருக்கு பெற்றுக்கொடுத்த நாடு.
1. ஒல்லாந்து  2. போர்த்துக்கல்  3. பிரித்தானியா  4. பிரான்ஸ்

24. இந்தியாவின் ஆட்சியாளன் கஜனிமுகமது பற்றிய சரியான கூற்று.
1. இந்தியா முழுவதும் இஸ்லாம் மதத்தைப் பரப்பியமை.
2. இந்தியாவின் வளங்களைக் கொள்ளையடித்தமை.
3. டில்லி பேரரசின் அரசனான பிருதிவிராசனை தோற்கடித்தமை.
4. இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டமை.

25. இலங்கை அன்னியர் வசமானமைக்கு பிரதான காரணியாக அமைந்தது.
1. இந்து சமுத்திரத்தின் மத்தியில் இருந்தமை.
2. தர்மபாலனால் எழுதப்பட்ட உயில்.
3. 7ம் விஜயபாகு கொலைச்சம்பவம்
4. 7ம் புவனேகபாகு போர்த்துக்கேயரிடம் சரணடைந்தமை.

26. முதன்முதலில் கண்டி இராச்சியத்திற்கு வருகைதந்த ஒல்லாந்து நாட்டுத்தூதுவர் ஸ்பில்பேகனைச் சந்தித்த மன்னன்.
1. 1ம் விமலதர்மசூரியன்  2. 2ம் விமலதர்மசூரியன்
3. 2ம் இராஜசிங்கன்  4. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

27. ஒல்லாந்தரின் கீழைத்தேச மத்திய நிலையம்
1. சென்னை  2. கோவா  3. சூரத்  4. பத்தேவியா

28. மறுமலர்ச்சிக் காலத்தில் சித்திரக்கலையின் மத்திய நிலையமாகத் திகழ்ந்த நகரம்
1. புளோரன்ஸ  2. ரோம்  3. கொன்ஸ்தாந்திநேபிள்  4. வெனிஸ்

29. கிழக்கு, மேற்கு வர்த்தகத்தின் மத்திய நிலையமாகத் திகழ்ந்த கொன்ஸ்தாந்திநேபிள் நகரை துருக்கியர் கைப்பற்றிய ஆண்டு.
1. கி.பி 1543  2. கி.பி 1453  3. கி.பி 1354  4. கி.பி 1345

30. பைபிளை முதன்முறையாக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்.
1. மார்ட்டின்லூதர்  2. ஜோன் கல்வின்  3. ஜோன்வைக்ளிப்  4. உல்ரிச்சுவிங்ளி

31. பிரித்தானியர் இலங்கை மீது கவனம் செலுத்துவதற்கு முக்கிய காரணமாக இருந்த விடயம்.
1. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை ஆரம்பித்தல்.
2. மக்களை கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றுதல்.
3. கறுவா வர்த்தகம் தொடர்பாக தனியுரிமையைப் பெறல்
4. திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம்.

32. கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனிக்கெதிராக கிளர்ச்சி பற்றி ஆராய அனுப்பப்பட்ட பிரித்தானியக்குழு.
1. சோல்பரி ஆணைக்குழு  2. மியூரன் குழு
3. கோல்புறூக் ஆணைக்குழு  4. டொனமூர் ஆணைக்குழு

கண்டி இராச்சியம் தனது சுதந்திரத்தை இழந்த போது கடமையாற்றிய பிரித்தானிய ஆளுனர்.

1. பிரட்டிக்நோர்த்
2. டொரிங்டன் பிரபு
3. தோமஸ் மெயிற்லண்ட்
4. ரொபேட் பிறவுண்றிக்

1848ன் 2வது சுதந்திரப் போராட்டத்தின் தொடர்புடையவர்கள் அடங்கிய விடைத்தொகுதி

1. வீரபுரன் அப்பு, கொங்காலே கொடபண்டா, குடாபொலபிக்கு
2. கெப்பிட்டிப்பொல, குடாபொலபிக்கு, மொகட்டால
3. பூட்டாவேரட்டேரால, மொகட்டால வீரபுரன் அப்பு
4. குடாபொலபிக்கு, பிலிமத்தலாவ, வீரபுரன் அப்பு

கி.பி 1840ல் தரிசு நிலச்சட்டத்தினை அமுல்படுத்திய பிரித்தானிய ஆளுநர்.

1. டொரிங்டன்
2. ஸ்டுவட்மெக்கன்ஸி
3. கோல்புறூக்
4. மனிங்

பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்ட பயிர்ச்செய்கையை மேம்படுத்தல் உள்நாட்டு விவசாயத்தில் வீழ்ச்சி என்பவற்றுக்கு ஒரே நேரத்தில் செல்வாக்கு செலுத்திய காரணி.

1. இந்தியதோட்டத் தொழிலாளர் வரவழைக்கப்பட்டமை.
2. சிவில் சேவையாளர்கள் தனியார் வியாபாரங்களில் ஈடுபடல்.
3. தரிசு நிலச்சட்டத்தை நடைமுறைப்படுத்தியமை.
4. கட்டாய இராஜகாரிய முறையைக் கொண்டு வந்தமை.

டொனமூர் அரசியல் சீர்திருத்தங்களுக்கேற்ப இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்களைக் கொண்ட விடைத்தொகுதி.

A. சர்வஜன வாக்குரிமை வழங்கியமை
B. இருசபை கொண்ட பாராளுமன்றம் உருவானமை.
C. அரசுக்கழகம் உருவானமை.
D. நிர்வாகக்குழுமுறை அமைக்கப்பட்டமை.

1. A,B
2. A,C
3. D,B
4. C,B

கி.பி 1818 1வது சுதந்திரப் போராட்டத்திற்கு உடனடிக் காரணமாக அமைந்த விடயம்.

1. பௌத்த பிக்குகள் புறக்கணிக்கப்பட்டமை.
2. ஊவா வெல்லச பிரதேசத்தில் முகாந்திரமாக ஹஜ்ஜிமரிக்கார் நியமிக்கப்பட்டமை.
3. பிரபுக்களின் வருமானம் குறைவடைந்தமை.
4. கண்டி உடன்படிக்கை மீறப்பட்டமை.

இலங்கையின் வடபிரதேசம் கல்வியில் சிறப்பாக இருந்தமைக்கு பங்களித்த மிஷனரி இயக்கம்.

1. லண்டன் மிஷனரி
2. பப்டிஸ்ட் இயக்கம்
3. வெஸ்லியன் மிஷனரி
4. அமெரிக்கன் மிஷனரி

1891ல் மகாபோதி இயக்கத்தை ஆரம்பித்தவர்.

1. ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட்
2. அநாகரிகதர்மபாலா
3. டி. பி. ஜயதிலக
4. வலானே சித்தார்த்த தேரர்

பகுதி- II

- பகுதி I ல் முதலாம் வினா கட்டாயமானது
- பகுதி II ல் இருந்து மூன்று வினாக்களும் பகுதி III ல் இருந்து இரு வினாக்களையும் தெரிவு செய்தல் வேண்டும்.
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடைதருக.

---

பகுதி- I

01. அ. பகுதி (i) யில் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப்படத்திலும் பகுதி (ii) ல் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

i. கதம்பநதி, கருந்திநதி, மகாகம, தீககாம, முல்லேரியா, நயினாதீவு, குருளுவாவி, மினிப்பேஅணை,பூநரி, சிகிரியா

ii. மலாக்கா நீரிணை, கோழிக்கோடு, கம்பூச்சியா, கொரியா குடாநாடு, குவாங்கோநதி, வெனிஸ், கோவா, அம்ஸ்ரடாம்.

ஆ. I. கீழே A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடையவற்றை முறையே எழுதுக.


A – இலங்கையை "தாமிரபாணி" எனக்குறிப்பிடும் நூல்

B – வலகம்பா மன்னனிடம் அபயகிரி விகாரையைத் தானமாகப் பெற்ற பிக்கு.

C – முதலில் வாக்குரிமை மூலம் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட இலங்கையர்.

D – மத்திய ஆசியாவில் பாமியன் புத்தர்சிலை காணப்படும் நாடு.

II. அருகே காணப்படும் படங்களை அவதானித்து விடை தருக.



1. இக்கலைப்படைப்பினைப் பெயரிடுக.
2. இப்படைப்பினை உருவாக்கிய மன்னன்
3. இம் மன்னனின் வம்சம் யாது?
4. இத் தாதுகோபத்தில் காணப்படும் விசேட கலை அம்சம் யாது?



1. இக்கலைப்படைப்பினைப் பெயரிடுக.
2. இக் கலைப்படைப்பு உருவாக்கப்பட்ட இராசதானிக் காலம்
3. இதனை வடிவமைத்த மன்னனைப் பெயரிடுக.
4. இக்கலைப்படைப்பினை ஒத்த அனுராதபுரத்தில் காணப்படும் கலைப்படைப்பினைப் பெயரிடுக.

பகுதி II

02. I. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால பின்வரும் விடயங்கள் காணப்பட்ட இடங்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து முறையே எழுதுக.

A – நீதிமன்றத்தின் மூலம் பெறப்படும் வருமானம் அப்பிரதேசத்தில் உள்ள விகாரைகளுக்கு உரியது எனக் கூறும் கல்வெட்டு.

B – துறைமுகவரி அறவிடப்பட்டமை பற்றி அறிய உதவும் கல்வெட்டு

C. – கேத்திரகணித முறையிலமைந்த கல்லாயும் கண்டுபிடிக்கப்பட்ட இடம்.

(கொடவாய, பாகியன்கல, கித்துல்பவ்வ, பலாங்கொட)

(3 புள்ளிகள்)

II. பின்வரும் ஆரியக் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்ட ஆறுகளை முறையே தருக.

P - அநுராதகம　　Q - தீகவாவி

R - மகாகம　　S - உருவெலகம

(4 புள்ளிகள்)

III. மகா பராக்கிரமபாகுவின் நீர்ப்பாசன சேவைகளை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(5 புள்ளிகள்)

IV. பொலநறுவை இராசதானியின் வீழ்ச்சிக்குரிய காரணங்கள் மூன்றைக் கூறி விளக்குக.

(6 புள்ளிகள்)

03. I. நீர்வள நாகரிகம் நிலவிய காலப்பகுதியில் பின்வரும் பதவிகளுக்குப் பொறுப்பானவர்களை கீழே தரப்பட்ட பட்டியலில் இருந்து தெரிந்தெடுத்து ஒழுங்கு முறையாக எழுதுக.

A – அரசனின் ஆவணங்களுக்குப் பொறுப்பானவர்.

B – போர் உபகரணங்களுக்குப் பொறுப்பானவர்.

C – சமயச் சடங்குகளுக்குப் பொறுப்பானவர்.

(புரோகிதர், வெதனா, படாகரிக்க, அசிக்காஹ, மஹலேனா)

(3 புள்ளிகள்)

II. பின்வரும் பணிகளுடன் மன்னர்களை தருக.

A – சுருங்கவழி நீர்ப்பாசன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்திய மன்னன்

B – கலாவாவியிலிருந்து திசாவாவிக்கு நீர்கொண்டு செல்லும் ஜயகங்கை கால்வாயை அமைத்த மன்னன்.

C – அங்கமடில்ல கால்வாயை அமைத்த மன்னன்.

D – பப்பதன்ன கால்வாயை அமைத்த மன்னன்.

(4 புள்ளிகள்)

III. நீர்வளநாகரிக காலத்தில் வெளிநாட்டு வர்த்தகம் சிறப்புற அமைந்தமைக்கான இலங்கையின் அமைவிடக் காரணிகள் இரண்டைக் கூறி விளக்குக.

(5 புள்ளிகள்)

IV. புராதன இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பில் கிராம நிர்வாகம் தொடர்பாக 3 விடயங்களைக் கூறி விளக்குக.

(6 புள்ளிகள்)

04. 13ம் நூற்றாண்டு தொடக்கம் 15ம் நூற்றாண்டின் இறுதி வரை இலங்கை வரலாற்றில்

I. தம்பதெனியாவை ஆட்சிசெய்த மூன்று மன்னர்களின் பெயர்களைத் தருக? (3 புள்ளிகள்)

II. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய இராசதானிகளை ஒழுங்கு முறையாகத் தருக.

A – பெலிகலையில் தலதாமாளிகையை அமைத்தமை

B – தலதா பூஜா நடத்தும் விதத்தைக் கூறும் தலதாசிரிதர் எனும் நூல் எழுதப்பட்டமை.

C – அரேபிய தேசசஞ்சாரியான இபன்பதூதாவின் வருகை.

D – இலக்கியத்தின் பொற்காலம் எனக்கருதப்பட்ட காலம். (4 புள்ளிகள்)

III. 4ம் பராக்கிரமபாகுவின் பணிகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

IV. தென்மேற்கு நோக்கிய இராசதானிகளின் இடப்பெயர்வு மக்களின் பொருளாதாரத் துறையில் ஏற்படுத்திய மாற்றங்களை மூன்று காரணிகளினூடாக விளக்குக. (6 புள்ளிகள்)

05. I. இலங்கையில் ஏற்பட்ட "விஜயபாகு கொள்ளை"யை தொடர்ந்து கோட்டை இராச்சியம் பிரிக்கப்பட்ட 3 இராச்சியப் பிரிவுகளையும் தருக?

(3 புள்ளிகள்)

II. பின்வரும் நிகழ்வுகளுடன் தொடர்புடையவர்களை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்க.

P – கி.பி 1505ல் காலித் துறைமுகத்தை வந்தடைந்த போர்த்துக்கேய தளபதி

Q – முல்லேரியாப்போரில் போர்த்துக்கேயரைத் தோற்கடித்த மன்னன்.

R – கி.பி 1766ல் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட ஒல்லாந்து ஆளுநர்.

S – போர்த்துக்கேயர் இலங்கை வந்த போது யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன்.

(தலஸ்தா, லோரன்ஸ்த அல்மேடா, 2ம் இராஜசிங்கன், 1ம் இராஜசிங்கன், பன்எங்கல் பெக், வில்லியம் பல்க், பரராஜசேகரன், சங்கிலியன்)

(4 புள்ளிகள்)

III. 1ம் விமலதர்மசூரியன் கண்டி இராச்சியத்தின் உரிமையை பெற்றுக் கொண்ட முறையை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(5 புள்ளிகள்)

IV. போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்தமையினால் மக்களிடையே ஏற்பட்ட சமூகக் கலாசார மாற்றங்கள் மூன்றைக் கூறி விபரிக்க.

(6 புள்ளிகள்)

0 I. பினவரும் நிகழ்வுகளுடன் தொடர்புடைய பிரித்தானிய ஆளுநர்களைத் தருக.

1. கி.பி 1803ல் கண்டி மீது படையெடுத்த ஆளுனர்.
2. கி.பி 1810ல் யூரிசபை முறை அறிமுகப்படுத்திய ஆளுனர்.
3. நீர்ப்பாசன அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில் கந்தளாய்குளம், யோதவா கால்வாயைப் புனரமைத்த ஆளுனர்.

II. கி.பி 1833ல் நடைமுறைப் படுத்தப்பட்ட கோல்புறூக் யாப்பின் சீர்திருத்தங்கள் நான்கு தருக.
(4 புள்ளிகள்)

III. கி.பி 1818ன் முதலாவது சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள் இரண்டைக் கூறி விளக்குக.
(5 புள்ளிகள்)

IV. டொனமூர் யாப்பின் மூலம் கொண்டுவரப்பட்ட முக்கிய மாற்றங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.
(6 புள்ளிகள்)

## பகுதி- III

07. I. ஆரியர்கள் இந்திய வருகைக்குப் பயன்படுத்திய மூன்று கணவாய்களின் பெயர்களைத் தருக.
(3 புள்ளிகள்)

II. ஆரியர்களால் ஏற்படுத்தப்பட்ட 16 குடியேற்றங்களில் நான்கு பெருங் குடியேற்றங்களின் பெயர்களைத் தருக.
(4 புள்ளிகள்)

III. மௌரியப் பேரரசின் கட்டிடக்கலை நுட்பங்கள் பற்றிய அம்சங்களை இரண்டு உதாரணம் மூலம் விளக்குக.
(5 புள்ளிகள்)

IV. குப்தர் காலத்தில் இலக்கிய வளர்ச்சி உன்னத நிலையில் இருந்தது என்பதனை இரு காரணிகளினூடாக விளக்குக.
(6 புள்ளிகள்)

08. I. மத்திய கால ஆசியாவில் ஆட்சி புரிந்த முஸ்லிம் பேரரசுகள் மூன்று தருக.
(3 புள்ளிகள்)

II. முஸ்லிம் பேரரசரான மாமன்னர் அக்பரின் சிறந்த பண்புகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

III. ஆசியாவில் பௌத்த சமயம் ஏற்படுத்தியுள்ள செல்வாக்கினை இரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக.
(5 புள்ளிகள்)

IV. இஸ்லாம் சமயத்தின் பரவல் இந்தியாவில் ஏற்படுத்திய செல்வாக்கினை மூன்று விடயங்களின் அடிப்படையில் விளக்குக.
(6 புள்ளிகள்)

09. I. பிரான்சியப் புரட்சியின் மூன்று எண்ணக்கருக்களும் யாவை?
(3 புள்ளிகள்)

II. இத்தாலியை ஐக்கியப்படுத்துவதற்கு முன்னின்று உழைத்த நான்கு புரட்சியாளர்களின் பெயர்களைத் தருக.
(4 புள்ளிகள்)

III. பிரான்சியப் புரட்சி ஏற்படுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் இரண்டைக்கூறி விளக்குக.
(5 புள்ளிகள்)

IV. பிரான்சியப் புரட்சி வெற்றி பெற்று மானிடவாதம் நிலைப்பதற்கு ஏதுவாக அமைந்த தத்துவ ஞானிகள் மூவரைக் குறிப்பிட்டு அவர்களின் கருத்துக்களை விபரிக்க.
(6 புள்ளிகள்)

10. I. ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகள் 3 தருக. (3 புள்ளிகள்)

II. நாடுகாண் பயணத்தினை மேம்படுத்துவதற்கு கடலோடி ஹென்றி மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டு தருக?
(4 புள்ளிகள்)

III. நாடுகாண் பயணங்களுக்கான பொருத்தமான சூழ்நிலைகள் ஐரோப்பாவில் காணப்பட்டமையை இரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக. (5 புள்ளிகள்)

IV. நாடுகாண் பயணங்களின் விளைவாக மதச்சீர்திருத்தம் ஏற்பட்டது. புரட்டஸ்தாந்து சமயம் உருவாவதில் மாட்டின்லூதரின் பங்களிப்பை விபரிக்க.
(6 புள்ளிகள்)

